# திருமிகு. வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள்

## (வட்டார போக்குவரத்து அலுவலகம் கும்பகோணம்,மயிலாடுதுறை)

## முன்னிலையில் .....

S.ராஜசேகரன்(வயது 44/2019) த/பெ.சிவனாண்டி **9842277232**
மாநில பொதுச்செயலாளர், **LAW FOUNDATION REG.NO.26/2010**
மாநில பொதுச்செயலாளர் **மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்கள் சங்கம் பதிவு எண்; 3/2014**,
மாநில சட்டசெயலாளர் **அகில இந்திய பத்திரிகையாளர் நலச்சங்கம் REG.NO:180/2015**
68, பிள்ளையார் கோவில் தெரு,
குப்பி நாயக்கன் பட்டி, போடி நாயக்கனுர்-625513
தேனி மாவட்டம் - மனுதாரர்

**இந்திய அரசமைப்பு 1950 கோட்பாடு 19, 21 மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 101 –இன் கீழ் தன்னிலை விளக்கம் மற்றும் குற்ற விசாரணை முறை சட்டம் 1973 பிரிவு 2(இ) மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 28(1) மனித உரிமை பாதுகாப்பு சட்டம் 1993 பிரிவு 30இன் கீழ் முன் அறிவிப்பு .....**

தேனி மாவட்டம்,போடிநாயக்கனுர் வட்டம், போடிநாயக்கனுர் ,குப்பி நாயக்கன் பட்டி,68 பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் S.ராஜசேகரன் வயது 44 இந்து, ஆகிய நான் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 70-இன் கீழ் ஏற்புரை செய்து மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 57(1) - ன் கீழ் நாட்டில் அமலில் உள்ள சட்டங்களை நீதிமுறையில் கவனத்தில் கொண்டு எந்த வழக்கிற்கும் குந்தகமில்லாமல் கும்பகோணம்,மயிலாடுதுறை வாகன புகை பரிசோதனை

மையங்களின் சார்பாக பதில் மனுவாக சத்தியபிரமாணமாய் தாக்கல் செய்வது யாதெனில்,

1. இந்திய அரசியலமைப்பு 1950 கோட்பாடு 19(1) - இன் கீழ் வழங்கிய அடிப்படை உரிமை மற்றும் இந்திய அரசமைப்பு 1950 கோட்பாடுகள் 29(1)மற்றும்350-இல் தமிழில் இம்மனு பணிவுடன் சமர்பிக்கப்படுகிறது.

2.மாண்பமை உச்ச நீதிமன்றம் " நீதிபதிகள் இடமாற்ற வழக்கின் போது, ஏழு நீதிபதிகள் குழுவின் தீர்ப்பில் வறுமை அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் நீதிமன்றத்தை அணுக முடியாதவர் குறையை களையக்கோரி, நேரடியான பாதிப்புக்கு ஆளாகாதவர் நீதிமன்றத்தை அணுக முடியுமா என்ற விவாதத்தை தீர்த்து வைத்தது. பாதிக்கப்பட்டவரது சட்டப்பூர்வமான அல்லது அரசமைப்பு சட்ட உரிமைகளை நிலை நாட்டும் பொருட்டு போதுமான ஈடுபாடு கொண்ட எந்த ஒரு பொதுமனிதனும் ஒரு சாதாரண அஞ்சலட்டையின் மூலமாக கூட நீதிமன்றத்தை நாடலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது" (எஸ்.பி.குப்தா மற்றும் ஏனையோர் எதிர் குடியரசுத்தலைவர் மற்றும் ஏனையோர் (ஏ.ஐ.ஆர் 1982 எஸ்சி 149) என்பதையும் தங்களின் கவனத்திற்கு மிகவும் பணிவுடன் தெரியப்படுத்துகின்றேன்.

3.தமிழ்நாட்டில் மொத்தம் 350 தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள் உள்ளன. வாகன புகை பரிசோதனை கட்டணங்கள் கடந்த GO.NO.674 Dated 3-06-1998 படி இரண்டு சக்கர வாகனங்கள் ரூபாய் 30

நான்கு சக்கர வாகனங்கள் ரூபாய் 50

கனரக வாகனங்கள் ரூபாய் 100 வசூலிக்கப்பட்டது

கடந்த 2004 ஆம் ஆண்டு அனைத்து புகை பரிசோதனை மையங்கள் கணினி வழியே வாகன புகை பரிசோதனை மூலம் வழங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.அப்போது அனைத்து மையங்கள் சுமார் 3 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.(BySROA-1(a)/2004 dated 07-01-2004)

கடந்த 2007 ஆம் ஆண்டு டீசல் வாகன புகை பரிசோதனை கருவியில் இஞ்சின் ஆர்.பி.எம். கருவிபொருத்தவேண்டுமென அரசு உத்திரவின்படி

அனைத்து மையங்கள் சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவில் டீசல் மெசின் மேம்படுத்தப்பட்டது.

4.கடந்த 2011 அம் ஆண்டு பெட்ரோல் கருவியில் 4 கேஸ் அனலைஷர் மாற்ற அரசு உத்திரவு பிறபிக்கப்பட்டது. அனைத்து மையங்களும் சுமார் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் செலவில் பெட்ரோல் கருவி புதியதாக வாங்கப்பட்டது.

5.மேற்படி வாகன புகை பரிசோதனை மையத்தில் ஆண்டுக்கு மெசின் AMC 12,000 Machine Califiration 12000 CENTRE Rent 48000 Salery 80000 Machine printer cost 12000 total COST per Year 1,64,000 வருட வருமானம் சுமார் 2,0,00,00 இரண்டு லட்சம் மட்டுமே வருகிறது. அனைத்து மையங்களும் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவருகிறது. நூற்றுக்கு மேற்பட்ட மையங்கள் அடைக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் தற்போது ஆன்லைனில் வாகன புகை பரிசோதனை செய்ய அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது.

6.ஆன்லைனில் புகை பரிசோதனை திட்டம் மிகவும் பயனுள்ளது போலி கணினி மென்பொருள் வழியே புகை சான்று வழங்குதல்,வாகனத்தை முறையாக ஆய்வு செய்யாமல் சான்று வழங்குதல் போன்ற ஒழுங்கீனங்கள் இனி இருக்காது சுற்று சூழல் பாதுகாக்கபடும் அதனால் தமிழக அரசுக்கும், மாண்புமிகு போக்குவரத்து ஆணையர் அவர்களுக்கும் எங்கள் சங்கத்தின் சார்பாக மிகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

7.கடந்த 1-4-2019 அன்று முதல் அனைத்து மாநிலங்களில் ஆன்லைனில் சான்று வழங்க வேண்டுமென கடந்த 8-03-2019 அன்று தான் போக்குவரத்து ஆணையர் அவர்களின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி கருவி மேம்படுத்தல் சம்பந்தமாக புகை பரிசோதனை தயாரிப்பு நிறுவனங்களிடம் விசாரித்த போது அனைத்து வாகன புகை பரிசோதனை கருவிகள் புதியதாக வாங்க வேண்டுமெனவும், கணினி

மேம்படுத்த ஒரு லட்சம் செலவு செய்யவேண்டுமெனவும் புதிய மெசின் வழங்க தயாரிப்பு நிறுவனங்களுக்கு சுமார் 45 நாட்கள் ஆகுமெனவும் கடந்த 5-04-2019 போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வாகன் மென்பொருள் மூலம் ஆன்லைன் புகை சான்று வழங்க இயந்திரம் மேம்படுத்த,கணினி மென்பொருள் மேம்படுத்த அனைத்து வாகன புகை பரிசோதனை மையங்களின் உரிமையாளர்களிடம் ஆலோசனை செய்து ஆன்லைனில் புகை சான்று வழங்க **6** மாதம் கால அவகாசம் கோரிக்கை சங்கம் சார்பாக பதிவு தபாலில் மனு திரு.போக்குவரத்து ஆணையர் அவர்களுக்கு அனுப்பட்டது.

7.இந்தியா முழுவதும் மூன்று மாநிலங்களில் மட்டுமே அன்லைனில் இன்று வரை புகை சான்று வழங்கப்படுகிறது. கடந்த 3-04-2019 அன்று தான் வாகன் தேசிய தகவல் மையத்தில் ஆன்லைனில் தமிழ்நாடு மாநில உட்பட ஐந்து மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்த பின் ஆன்லைனில் அனைத்து வாகன புகை பரிசோதனை மையங்களுக்கு நுழைவு குறியீடு மற்றும் பாஸ்வேர்ட் வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் தரவேண்டும். கடந்த 1-4-2019 அன்று முதல் மத்த மாநிலங்களில் அமுல்படுத்தப்பட்டது ஆனால் மஹாராஸ்ட்ரா, மாநிலத்தில் மட்டும் கால அவகாசம் ஆறு மாதம் வழங்கப்பட்டது. மற்ற மாநிலங்களில் இன்னும் இந்த ஆன்லைனில் புகை சான்று திட்டம் அமுல் படுத்தவில்லை என்பதையும், கோவை மாவட்டம் இணைபோக்குவரத்து ஆணையர் அவர்கள் ந.க.எண்: **01/A1/2019 Dated 09-04-2019 vahan 4 software** ஆன்லைனில் சான்று வழங்க **13-04-2019** வரை காலாவகாசம் வழங்கி உள்ளார்கள் என்பதை தங்களின் கவனத்திற்கு கொன்டுவருகிறேன் இந்நிலையில் கும்பகோணம், மயிலாடுதுறை மையங்களுக்கு போதிய கால அவகாசம் கொடுக்காமல் மையங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்வதாக தாங்கள் அனுப்பிய மெமோ மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 115 செல்லதக்கதில்லை.

8. மேலும் தமிழ்நாடு மட்டும் உடனே ஆன்லைனில் சான்று வழங்க கட்டாயபடுத்துவது. இந்திய அரசமைப்பு**1950** கோட்பாடு**14** படி சட்டத்தின்முன் அனைவரும் சமம், சட்டத்தின் முன் சமமான சட்டபாதுகாப்பு என்ற இயற்கை நீதிக்கு விரோதமாகும். மேலும் சுயவேலைவாய்ப்பு உரிமையை பறிப்பதாகும் இது இந்திய அரசமைப்பு **1950** கோட்பாடுகள் **19(1)(g),21,** எதிரானது, போக்குவரத்து ஆணையர் அலுவலக சுற்றறிக்கை **Letter.R.no.50166/C3/2019 Dated 25-03-2019** தங்களின் அறிவிப்பு ந.க.எண்: **12420/இ1/2009 நாள்: 09-04-2019** இயற்கை நீதிக்கு எதிரானது இந்திய அரசமைப்பு 1950 கோட்பாடு **13(2)** இன்படி செல்லதக்கது இல்லை என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

9.அரசு அதிகாரிகளின் சட்ட விரோத செய்கைகளுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு, இழப்பீடு வழங்க அரசாங்கம் பொறுப்புடையதாகும் என்று **T.Sekaran VS State of TN2010(1)CWC 455 (MAD)2010 Writ LR 851 வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது இதன் படிமனுதாரர் தக்க நஷ்ட ஈடு பெற உரிமையுடைவர்** என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

10.அதிகார நிலையினர் நல்ல எண்ணத்துடன் செயல்படவேண்டும். தன்னிச்சையாக சட்டவிரோதமாக செயல்படகூடாது. **AIR 1957 ALL 297(301)(DB) : AIR 1960ALL(28,29) (FB) என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது இதன் படிமனுதாரர் தக்க நஷ்ட ஈடு பெற உரிமையுடைவர்** என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்

11.வாழ்வுரிமை அல்லது தனி மனித சுதந்திரம் ஆகியவற்றிக்கு பாதகம் ஏற்படும்போதும், அரசு அதிகாரிகளின் சட்ட விரோத செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் ***SAHELI VS COMMISSIONER OF POLICE 1990(1)SJ300, SCC 1990(1) 422:AIR 1990 SC 513*** **வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது இதன் படிமனுதாரர் தக்க நஷ்ட ஈடு**

**<u>பெற உரிமையுடைவர்</u>** என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

12.தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் புது டெல்லி **Revision Pettition No: 2273/2012** தீர்ப்பில் சட்டப்படியான கடமையை செய்ய தவறினால் சேவை குறைபாடு ஆகும் கடமை தவறிய அலுவலர் மீது பாதிக்கப்பட்ட நபர் நுகர்வோர் நீதிமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 12இன் படி வழக்கு தொடர்ந்து நஷ்ட ஈடு பெறலாம் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்..

13.மாநில மனித உரிமை ஆணையம் கடமை தவறிய சட்டபடி செயல்படாமல் இந்திய குடிமகனுக்கு பட்டா வழங்க தாமதித்த வட்டாட்சியர் ஒரு லட்சம் நஷ்ட ஈடு வழங்க **S.H.R.C.NO:4105/2009 LOGANATHAN VS THASILDAR** உத்திரவிட்டது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

14.எந்த நீதிமன்றமும் சட்டத்திற்கு மாறாக இயற்றப்பட்ட சட்டவழியின்றி,ஒரு நபருக்கு ஆளுகை அல்லது அதிகாரம் அளிக்கமுடியாது அவ்வாறு அளித்தால் அது செல்லாது உச்ச நீதிமன்றம் குடிமகனுடைய தொழில் செய்யும் உரிமை மீது அதிகப்படியான கட்டுபாடுகள் விதிக்கூடாது என சுப்ரீம் கோர்ட் உத்திரவிட்டுள்ளது ***thus the notification dated 3-8-89 amounts to excessive restriction and it is well settled that excessive restriction which is not required in the public interest is not reasonable and hence not saved article 19(1)(g) vide Maneklal Chotelal VS M.E.Makwana AIR 1967 SC1373 (para 46) Express NewspapersLtd VS Union of India AIR 1958SC578 இந்த வழக்குகளில்*** தீர்ப்பு அளிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் சட்டம் இயற்ற முடியாது சட்டம் இயற்றும் அதிகாரம் சட்டமன்றம், மற்றும் பாரளுமன்றம் ஆகிவற்றிற்கு

மட்டுமே இந்திய அரசமைப்பு **1950** கோட்பாடு **136** இன் படி உண்டு என்பதையும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் **1989** பிரிவு **116** இன் படி ஆன்லைனில் புகை சான்று வழங்க சட்டதிருத்தம் கொண்டு வராமல் தமிழ்நாடு போக்குவரத்துறை அரசாணை பிறப்பிக்காமல் கடிதம் மூலம் உத்திரவு பிறப்பித்தது சட்டவிரோதமாகும். கடந்த ஓட்டுனர் பயிற்சி பள்ளி மேம்படுத்தல் சுற்றறிக்கை **43/007** மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றம் நீதி பேராணை எண்:**35479** தேதி **28-10-2009** **(Tamilnadu Driving School Owners Federation VS Transport Commissioner)** இந்திய அரசமைப்பு **1950** கோட்பாடு **13(2)** படி செல்லாது என்று தீர்ப்பு வழங்கியது என்பதை தெரியப்படுத்துகிறேன்.

எனவே இந்த நோட்டீஸ் கண்ட 24 மணி நேரத்தில் மேற்படி மையங்களுக்கு கொடுத்த மெமோவை வாபஸ் வாங்க வேண்டுமெனவும், உடனே வாகன புகை பரிசோதனை மையங்கள் இயங்க எழுத்துபூர்வமாக அனுமதி வழங்கவும் தவறும்பட்சத்தில் குற்ற விசாரணை முறை சட்டம் 1973 பிரிவு 200 –இன் கீழ் இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 166,167,199 -இன்கீழ் தனி நபர் வழக்கும் உரிமையியல் விசாரணைமுறை சட்டம் 1903 கட்டளை 7விதி 1-இன் கீழ் மற்றும் குறித்தவகைப் பரிகாரம் சட்டம் 1963 மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 12 -இன் கீழ் ரூபாய் 5 ல்ட்சம் நஷ் டஈடு வழக்கும் மனித உரிமை நீதிமன்ற நீதிமன்றத்தில் மனித உரிமை பாதுகாப்பு சட்டம் 1998 பிரிவு 30 -இன் கீழ் வழக்கு தொடர்ந்து தக்க நஷ்ட ஈடு மற்றும் நிவாரணம் பெறப்படும் என்பதையும் இது மனுதாரரின் இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவு 97-இன் கீழ் தற்காப்பு உரிமை என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

ஒப்பம்

**S.Rajasekaran**

**10-04-2019**

தக்க நடவடிக்கை எடுக்க நகல் சமர்பிக்கப்படுகிறது.....

1.திருமிகு.உள்துறைசெயலாளர் அவர்கள்,தலைமைசெயலகம்,சென்னை-9

2.திருமிகு.தலைவர் அவர்கள் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் கும்பகோணம்.

3.இந்திய அரசமைப்பு 1950 கோட்பாடு 226-இன் கீழ் நடவடிக்கை எடுக்க மாண்பமை.தலைமை நீதியரசர் அவர்கள் மெட்ராஸ் உயர்நீதிமன்றம்,சென்னை.

4.திரு.போக்குவரத்து ஆணையர் அவர்கள் போக்குவரத்து ஆணையர் அலுவலகம்,எழிலகம்,சேப்பாக்கம்,சென்னை.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், மயிலாடுதுறை.

ந.க.எண். 12420/இ1/2019 நாள்:- 09.4.2019

பொருள்: போக்குவரத்து துறை – மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல் - மாசுகட்டுப்பாடு – வாகன புகை பரிசோதனை நிலையங்கள் - மாசு கட்டுப்பாட்டு ஆய்வு சான்று சம்மந்தமான குறிப்பேடுகளை (emission related data) வாகன் குறிப்பேடு பதிவில் (Vahan database) 1.4.2019 முதல் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்காதது – விளக்கம் கோருதல் - தொடர்பாக.

பார்வை:

1. Letter from Under Secretary to Govt. of India Ministry of Road Tranpsort and Highways Transport Bhawan-1, Parliament Street, New Delhi-110 001, dt. 01.10.2018.
2. Transport Commissioner, Chennai R.No.50166/C3/2018 dated 14.03.2019 , 25.03.2019 and 29.03.2019.

-----

பார்வையில் கண்டுள்ள கடிதங்களின்படி, அனைத்து வாகன புகைப் பரிசோதனை நிலைங்களும், புகை பரிசோதனை செய்த குறிப்புகளை Vahan database-ல் 1.4.2019 முதல் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால், அவ்வாறு பதிவு செய்யும் பொருட்டு, தங்கள் புகை பரிசோதனை நிலையத்தினை, Online Vahan database-ல் பதிவு செய்ய தொடர்பு ஏற்படுத்தவில்லை. இது சம்மந்தமாக நேரிடையாக பல முறை தங்களிடம் அறிவுறுத்தியும், இதுநாள் வரை நடப்பில் கொண்டுவரப்படவில்லை.

எனவே, இக்குறிப்பாணை கிடைக்கப் பெற்றவுடன் தங்களின் விளக்கத்தினை கடிதம் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு தவறும் பட்சத்தில், தங்களின் புகை பரிசோதனை நிலைய அனுமதியின்மீது, மேல் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வட்டாரப் போக்குவரத்து அலுவலர்,
மயிலாடுதுறை.

பெறுநர்:

1) திரு ஜி.ஆர். வாகன புகை பரிசோதனை மையம்,
பூம்புகார் ரோடு, மயிலாடுதுறை.

2) ஏ.டி.எஸ் வாகன புகை பரிசோதனை மையம்
தரங்கம்பாடி ரோடு, மயிலாடுதுறை.

3) வெற்றி வாகன புகை பரிசோதனை மையம்
எருக்கூர் மெயின் ரோடு, அரசூர், சீர்காழி..

போக்குவரத்துத்துறை

அனுப்புநர்
திரு.கே.ஆர்.கிருஷ்ணமூர்த்தி,
இணைப்போக்குவரத்துஆணையர்,
கோவை சரகம்,

பெறுநர் (மின்னஞ்சல் மூலமாக)
வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள்,
மோ.வா.ஆ/ப.அ.
கோவை சரகம்

ந.க.எண்:01/A1/2019 நாள்:9.04.2019

அய்யா,

பொருள்: மோட்டார் வாகனம்-புகை பரிசோதனை நிலையங்கள் அனைத்தும் VAHAN ONLINE மூலம் செயல்படுத்த கோரியது-01.04.2019 முதல் நடைமுறைப்படுத்துதல்-தொடர்பாக.

9.4.19

பார்வை: 1.சென்னை,போக்குவரத்து ஆணையர் அவர்களின் கூட்ட நடவடிக்கைகள்,நாள்:08.03.2019.
2.சென்னை,போக்குவரத்து ஆணையர் அவர்களின் கடித எண்:50166/C3/2018,நாள்:25.03.2019.
3.இவ்வலுவலக கடிதம் இதே எண்,நாள்:29.03.2019

*********

பார்வையில் காணும் சென்னை,போக்குவரத்து ஆணையர் அவர்களின் கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் பார்வை-3ல் காணும் கடிதத்துடன் இணைத்தனுப்பப்பட்டது.மேற்கண்ட கடிதத்தில் அனைத்து வட்டாரப்போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள புகை பரிசோதனை நிலையங்கள் அனைத்தையும் VAHAN ONLINE மூலம் செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொண்டு,இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை பார்வை-2-ல் கண்டுள்ளவாறு அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.


மேலும் 01.04.2019 முதல் வாகன புகை பரிசோதனை சான்றிதழ் VAHAN-4 ONLINE மூலம் மட்டுமே வழங்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

எனவே,மேற்கண்ட பணியினை 13.04.2019-ற்குள் நிறைவு செய்ய சம்மந்தப்பட்ட புகை பரிசோதனை நிலையங்களுக்கு அறிவுறுத்த இச்சரகத்தில் உள்ள அனைத்து வட்டாரப்போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட புகை பரிசோதனை நிலையத்தின் உரிமம் ரத்து செய்யப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

9/4/19

இணைப்போக்குவரத்துஆணையர்
கோவை சரகம்.

/4/19




மஹாராஸ்ட்ராவில் கையால் எழுதி புகைபரிசோதனை சான்று வழங்குகின்றனர்

4G 10:36

Vo) LTE 4G 79

https://vahan.parivahan.gov.in

10

## Register New/Old PUC Centre


### Center Details

State *

Select State

Select State
Bihar
Chandigarh
Maharashtra
Tamil Nadu
Uttar Pradesh
West Bengal

### Station Address



12:58
62
ttps://vahan.parivahan.gov.in
7
Register New/Old PUC Centre
Center Details
State *
Select State
Select State
Bihar
Chandigarh
Maharashtra
Uttar Pradesh
West Bengal
Authorised Person *
Station Address
Station Address 1 *

9:59 75%

https://vahan.parivahan.gov.in/

MINISTRY OF ROAD TRANSPORT
AND HIGHWAYS
Government of India

e-Vahan वाहन

Online PUC Management Syst

Register New/Old PUC Centre

Center Details

State *

Select State

Select State
Chandigarh
Maharashtra
Uttar Pradesh
West Bengal

Authorised Person *

# ஆன்லைனில் வாகன புகை பரிசோதனை சான்று நடைமுறை சிக்கல்களை தீர்க்கக்கோரி ஸ்டிரைக்

**மதுரை, ஏப்.2–**

*தமிழகத்தில் ஆன்லைன் மூலம் வாகன புகை* பரிசோதனை சான்று வழங்குவதில் நிலவும் நடைமுறை சிக்கல்களை தீர்க்கக்கோரி, வாகன புகை பரிசோதனை மையங்கள் நேற்று மூடப்பட்டன.

தமிழகத்தில் 65 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 45 பகுதி நேர மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளன. மாநிலம் முழுவதும் 350 தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள் உள்ளன. இங்கு அனைத்து வாகனங்களுக்கும் கம்ப்யூட்டர் மூலம் வாகன புகை பரிசோதனை செய்து சான்று வழங்கப்படுகிறது. மத்திய அரசு அனைத்து வாகன புகை பரிசோதனை மையங்களை, 'வாகன் மென்பொருள்' மூலமாக இணைத்து பரிசோதனை முறையில் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, மேற்கு வங்கத்தில் செயல்படுத்தப்படுகிறது. ஏப்ரல் முதல் அனைத்து மாநிலங்களிலும், வாகன் மென்பொருள் மூலம் வாகன புகை பரிசோதனை சான்று வழங்க, மத்திய அரசின் தேசிய தகவல் மையம் முன்னறிவிப்பு இன்றி உத்தரவிட்டுள்ளது. இதை உடனே அமல்படுத்தும்படி தமிழக போக்குவரத்து கமிஷனர் வாய்மொழியாக உத்தரவிட்டுள்ளார்.

நாள் தோறும் 3,500 வாகனங்கள் தகுதி சான்று பெற வட்டார போக்குவரத்து அலுவலகங்களுக்கு வருகின்றன. வாகனங்களுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை, வாகன புகை பரிசோதனை சான்று அவசியம். இச்சான்று இன்றி வாகனம் ஓட்டினால் வாகன உரிமையாளருக்கு, 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படுகிறது.

வாகன் மென்பொருள் தகவல் மையம் இன்று வரை ஆன்லைனில் தமிழகத்தை இணைக்கவில்லை. எனவே, ஆன்லைன் வாகன புகை பரிசோதனை என்பது இயலாததாக உள்ளது. இதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை தீர்க்கக்கோரி மாநில அளவில் வாகன புகை பரிசோதனை மையங்கள் நேற்று மூடப்பட்டன.

# Emission testing centres seek time for transition to Vahan, e-register

## They say they need three months for upgrading technology


STAFF REPORTER
MADURAI

Members of the Motor Vehicle Emission Testing Centres' Association have appealed to the State Transport Authority to extend time by three months to make the shift to 'Vahan,' a national e-register of vehicles.

The State Transport Commissioner had directed testing centres across Tamil Nadu to begin uploading data on pollution emission of transport and non-transport vehicles on the portal, starting April 1. Until now, individual States had their own logs of registered vehicles.

R. Ramakrishnan, president of Motor Vehicle Emission Testing Centres' Association, presents a number of reasons for the 250-odd centres across Tamil Nadu not moving to the portal. There are 13 centres in Madurai. He says that the association is willing to comply and present data on the e-register but they do not possess the required technology to make the switch.

To protest against the immediate order to transfer to the Vahan portal, 13 centres in Madurai, who are members of the association, refused to issue fitness certificates to vehicles on April 1 and 2.




"Our centres use 10-year-old vehicle emission testing machines to check carbon levels. They should be periodically upgraded but it has not happened because of high cost. Similarly, we have old computers and poor Internet connectivity. To upgrade the existing services, it would cost each centre at least ₹3 lakh and three months time to adapt to new technology," he says.

These private emission testing centres have a five-year licence to test pollution levels in vehicles. Since they are private firms, they do not receive any assistance from the government with respect to technological upgradation. They charge ₹30 for two-wheelers, ₹50 for four-wheelers and ₹100 for heavy and commercial vehicles for issuing emission certificates.

The emission certificate is necessary to renew the fitness certificate of the vehicle and its insurance. Mr. Ramakrishnan says that insurance companies do not insist on FC for yearly insurance renewal.

He adds that there is a need to raise the fee collected for testing. "The fee has remained the same since checking of pollution emission was introduced in 1998. How will we make ends meet unless the fee is hiked," he asks.

A senior official of the State Transport department says that they will take up the plea for extension at a meeting to be held in Chennai on Thursday. He adds that other issues, including price rise, will be discussed then.

High Court imposes restraint on TNERC